# *2019 ONTARIO BUDGET இன் சிறப்பம்சங்கள்*

ஏப்ரல் 11, 2019

## பட்ஜெட்டை பொறுப்புடன் சமநிலைப்படுத்துவது

Ontario's Government for the People பட்ஜெட்டை பொறுப்பான முறையில் சமநிலைப்படுத்த உறுதிக்கொண்டிருக்கிறது-மாநில நிதிநிலையில் நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை மீட்ட. பட்ஜெட்டை சமநிலைப்படுத்தவது நமக்கு எது மிக முக்கியமோ அவற்றை பாதுகாக்க உதவும் - ஆரோக்கிய கவனிப்பு, கல்வி மற்றும் இதர முக்கிய பொது சேவைகள் -மற்றும் பின் வரும் சந்ததியதர்களுக்கு தேவையான நிதி கொடுப்பன உறுதி செய்யும். அரசாங்கம்:

- 2018–19 இல் $11.7 பில்லியன் பற்றாக்குறை எதிர்வு கூறப்படுகிறது, முந்தய அரசு விட்டுச்சென்ற $15 பில்லியன் பற்றாக்குறையிலிருந்து $3.3 பில்லியன் குறைவு.
- வேலைவாய்ப்பை உருவாக்கி நமக்கு எது மிக முக்கியமோ அவற்றை பாதுகாக்கையில் 2023-24 நிதியாண்டு வாக்கில் சமநிலைப்படுத்திய பட்ஜெட்டுகளை அடைய பொறுப்பான பாதையை வரைவது - முக்கிய பொது சேவைகள், ஒன்டாரியோவின் உலகத்தரமிக்க ஆரோக்கிய கவனிப்பு மற்றும் கல்வி அமைப்பு உட்பட - தனிநபர், குடும்பங்கள் மற்றும் வணிகர்களுக்கு மிகவும் தேவைப்பட்ட நிதிச் சலுகைகள் அளித்தல்.
- $343,000,000,000 பொது கடனை பொறுப்பான கடன் சுமையைக் குறைக்கும் திட்டம் மூலம் சமாளிப்பது நிதி நலத்தை மீட்கும், முக்கிய சேவைகளை பாதுகாக்கும் மற்றும் ஒன்டாரியோவின் நிகர கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி GDP விகிதத்தை 2022-23 நிதியாண்டுக்குள் முந்தய அரசு விட்டுச்சென்ற 40.8 சதவிகிதத்தைவிட குறைக்கும்.

- ஒன்டாரியோ மக்களுக்கு தம் அரசு பொறுப்பானது என்று நிரூபிக்க முன்மொழியப்பட்ட Fiscal Sustainability, Transparency and Accountability Act (FSTAA) அறிமுகப்படுத்தல். மற்ற முக்கிய புதிய பொறுப்புடைமை அளவுகளில் ஒன்றாக, முன்மொழியப்பட்ட FSTAA பிரீமியர் மற்றும் அமைச்சர்களின் Accountability Guarantee உள்ளடக்கி, ஒவ்வொரு தவரிய பகிரங்க அறிக்கை வெளியிடல் காலக்கெடுப்புக்கும் தம் பிரீமியர் மற்றும் அமைச்சர் சம்பளத்திளிருந்து 10 சத விகிதம் அபராதம் கட்ட வேண்டும். மேலும் அந்த அமைச்சர் காலக்கெடு ஏன் தவரியது மற்றும் எப்போது அறிவிப்பு வெளியிடப்படும் என்று பகிரங்கமாக விளக்க வேண்டும்.

## நமக்கு எது மிக முக்கியமோ அவற்றை பாதுகாப்பது

ஒன்டாரியோ மாநிலத்தில் உலகத்தரமிக்க ஆரோக்கிய கவனிப்பு மற்றும் கல்வி அமைப்புகளை பாதுகாக்க, அரசு தனது முடிவேடுத்தல்களில் மக்களை முன்னிலைப்படுத்தவேண்டும் என்று உணர்ந்து கொள்கிறது. அரசாங்கம்:

- புதிய Ontario Childcare Access and Relief from Expenses(CARE) வரி சலுகை திட்டமிடுகிறது. இந்த (CARE) வரி சலுகை ஒன்டாரியோவில் அறிமுகப்படுத்தப்பட்ட குழந்தை பராமரிப்பு திட்டங்களிலேயே மிகவும் நெகிழ்வானது. இத்திட்டம் குழந்தைப் பராமரிப்பு முடிவேடுத்தல்களில் பெற்றோர்களை முன்னிலைப்படுத்தும், அரசை அல்ல. புதிய CARE வரி சலுகை சுமாராக 300,000 குடும்பங்களுக்கு 75 சதவிகிதம் வரை தகுதியுள்ள குழந்தைப் பராமரிப்பு செலவுகள் அளிக்கும், மற்றும் குடும்பங்களுக்கு காப்பக மையங்களில், வீட்டில் மற்றும் முகாம்களில் அளிக்கப்படும் பராமரிப்பு உட்பட பல்வேறுபட்ட குழந்தைப் பராமரிப்பு விருப்பங்களை அனுமதிக்கும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் 30,000 குழந்தைப் பராமரிப்பு இடங்களை பள்ளிகளில் உருவாக்க $1 பில்லியன் உறுதி அளிக்கிறது, புதுப்பள்ளிகளில் 10,000 இடங்கள் உட்பட, பெற்றோர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மேலும் மலிவான குழந்தைப் பராமரிப்பு மையங்களை கண்டுபிடிக்க உதவி அவர்கள் வாழ்க்கையை எளிதாக்குதல்.

- மேலதிக $384 மில்லியன் மருத்துவமனைகளிலும் மற்றும் கூடுதல் $267 மில்லியன் வீடு மற்றும் சமூக கவனிப்புகளிலும் முதலீடு செய்கிறது. ஹால்வே ஆரோக்கிய கவனிப்பை (தகுதி குறைந்த மருத்துவ சேவை) நிறுத்தவும் மற்றும் ஆரோக்கிய கவனிப்பு செலவை எங்கு அதிகம் தேவையோ அங்கு ஒதுக்கீட இது இன்றியமையாதது. கூட, பராமரிப்பு மாற்றங்களை மேம்படுத்தவும் மற்றும் சேவைகளுக்காக காத்திருக்கும் காலதாமதத்தை குறைக்கவும், அரசாங்கம் Ontario Health Teams ஓரு ஒருங்கிணைந்த ஆரோக்கிய கவனிப்பு அளிக்கும் முறைமைக்கு ஒன்றை நோக்கி நகர முயல்கிறது.
- அடுத்த 10 ஆண்டுகளில் மன நலம், போதை மீட்சி மற்றும் இவ்வாறானவர்களுக்கு இருப்பிட உதவிக்கு $3.8 பில்லியன் முதலீடு செய்கிறது. இத்திட்டத்தின் முதன் படியாக ஓரு புதிய மன நலம் மற்றும் போதைகள் அமைப்பொன்றை உருவாக்கப்பட உள்ளது.
- காப்புறுதி போன்ற அனுகூலங்கள் அற்ற கீழ் வருமான முதியோர்களுக்கு ஒரு புதிய பல் மருத்துவ திட்டம் அறிமுகம் செய்கிறது. $19,300 அல்லது அதற்கு குறைந்த வருடாந்தர வருமானம் பெறும் தனித்த முதியவர்களும் அல்லது $32,300 க்கும் குறைந்த இணைந்த வருடாந்தர வருமாணம் பெறும் முதிய தம்பதியினர்களும் மாநிலம் எங்கும் பொது நல அலகுகளில், சமூக உடல்நல மையங்களில் மற்றும் Aboriginal Health Access Centres போன்றவற்றில் பல் மருத்துவ சேவைகள் பெறக்கூடும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் 15,000 புதிய நெடு-நேர கவனிப்பு படுக்கைகள் உருவாக்கி அதே வேளை 15,000 பழைய நெடு-நேர கவனிப்பு படுக்கைகளை புதுப்பித்து அதிக சிக்கலான உடல்நலம் கொண்ட நோயாளிகளுக்கு தகுந்த கவனம் அளிப்பதற்கு.
- பள்ளிகளின் நிலைமையை மேம்படுத்தி சிறந்த படிப்பு மற்றும் குழந்தைகள் மற்றும் மாணாக்கர்களையும் பாதுகாப்பாக வைக்க, 2019-20 பள்ளி ஆண்டில் பள்ளிகளை புனரைமைப்பதற்கு $1.4 பில்லியன் முதலீடு செய்யப்படும்.
- ஒன்டாரியோவின் கல்வி பாடத்திட்டத்தை திடப்படுத்துவது, முக்கியக் குறிப்பாக கணிதம் மற்றும் விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்ப மற்றும் கோடிங் (கணினி நிரல் எழுதுதல்) போன்ற வேலை திறன்கள் மற்றும் நிதி எழுத்தறிவு போன்ற வாழ் திறன்களும் அடங்கும்.

Ontario

- 2019–20 பள்ளி ஆண்டு முதல் ஒவ்வொறு பொது மானியங்களைப் பெறும் கல்லூரியும் பல்கலைக்கழகமும் மாணாக்கர்களுக்கு பாடக்கட்டணத்தை 10 சதவிகிதம் குறைக்கும் மற்றும் 2020–21 பள்ளி ஆண்டில் பாடக்கட்டணத்தை உயர்த்தாமல் நிலைநாட்டும். கல்லூரி படிப்பில் சேர்ந்துள்ள மாணாக்கர்கள் சுமாராக $340 சராசரி பாடக்கட்டண குறைப்பை பார்ப்பார்கள் மற்றும் இளங்கலை பட்ட கலைகள் மற்றும் விஞ்ஞானம் சேர்ந்துள்ள மாணாக்கர்கள் சுமாராக $660 சராசரி பாடக்கட்டண குறைப்பை பார்ப்பார்கள்.
- மக்களுக்கு தேவையான குடிமனை வழங்கலை அதிகரிக்க உதவ எதிர்வரும் Housing Supply Action Plan மூலம் சொந்த வீடு வாங்க மற்றும் வாடகைக்கு எடுக்க மேலும் செலவு திரனாக்கவுது.

## மக்களை முதன்மை படுத்துவது

கீழ்வருமாறு அரசாங்கம் மக்களுக்கு வாழ்வை எளிதாக்கவும் மற்றும் தேர்வையும் சுலபத்தையும் மேம்படுத்தவும் உறுதி கொண்டுள்ளது:

- மேலும் சேவைகளை ஆன்லைனில் கிடைக்கவும் மற்றும் உபயோகிக்க எளிதாக்கவும் முதல் டிஜிட்டல் மூலோபாயத்தை உபயோகித்தல், நேர்முக மற்றும் காகித அடிப்படையான செய்கைகளிலிருந்து நகர்ந்து, செலவுகளைக் குறைக்க உதவுகிறது.
- டொரான்டோ பெரு நகரில் நான்கு விரைவு போக்குவரத்துத் திட்டங்களை ஆதரிக்க மொத்த $28.5 பில்லியன் செலவு மதிப்பீட்டில் $11.2 பில்லியன் உறுதியளித்து புது சுரங்க ரெயில் கட்டுதல் மற்றும் நீட்டுதல்களுக்கு ஒன்டாரியோவின் வரலாற்றிலேயே மிகப்பெரிய மூலதன பங்களிப்பு. இவை உள்ளடக்குவது முன்மொழியப்பட்ட புதிய Ontario Line, Richmond Hill மற்றும் Markham வரை Yonge North Subway Extension, Etobicoke வரை Eglinton Crosstown West Extension மற்றும் 2029–30 க்குள் Scarborough Subway Extension ஐ முடிப்பது.
- ஐந்து ஆண்டுகளில் GO Transit ரயில் சேவையில் நாளொன்றில் மேலும் பயணங்கள் உட்பட மிக அதிக பெறுக்கத்தின் மூலம் சேவைகளை மேம்படுத்துவது, வழி விரிவாக்கம் புகுத்தல் மற்றும் GO Transit ரயில் வலைப்பின்னல் முழுக்க வேண்டும்போது உணவு மற்றும் பானங்கள் பரிமாறல் சாத்தியமா என்று கண்டறிவது.

- வண்டி காப்புறதி வாங்க எளிதாக்கல், ஓட்டுனர்களுக்கு எந்த வண்டி காப்புறதி பாதுகாப்பு தம் தேவைகளுக்கு தகுந்தது என்று முடிவெடுக்கையில் மேலும் தேர்வுகள் அளிப்பது உட்பட மற்றும் விகிதங்கள் மீது மேலும் கட்டுப்பாடு அளித்தல்.
- வயதடைந்த நுகர்வோர்களுக்கு தேர்வு மற்றும் சுலபத்தையும் மற்றும் வணிகங்களுக்கு வாய்ப்புக்களையும் மேம்படுத்த பார்க் போன்ற பொது இடங்களில் மது அருந்த மற்றும் ரசிகர்கள் டெயில்கேட் பார்ட்டிகளில் குடிக்க அனுமதிக்க நகராட்சிகள் தம் விதிகளை தாமே வகுத்துக்கொள்ள சட்டத்தை அறிமுகப்படுத்துவது.
- குடும்பங்களுக்கு அதிகம் தேவைப்படும்போது வரி நிவாரணம் அளிக்க முன்மொழி. ஒரு அன்பானவரின் மரணம் குடும்பங்களுக்கு கடின காலத்தை தரும். ஜனவரி 1, 2020 முதல், $50,000 அல்லது குறைந்த சொத்துள்ள வரி விதிக்கப்படக்கூடிய எஸ்டேட்களுக்கு Estate Administration Tax விளக்கப்படும், அதைவிட பெரிய எஸ்டேட்களுக்கு $250 அளவில் குறைக்கப்படும்.

## வணிகத்திற்கு திறந்திருக்கிறோம், வேலைகளுக்கு திறந்திருக்கிறோம்

அரசு அரசாங்க தடைகளை குறைத்து, வணிக செலவுகளை குறைத்து மற்றும் மேலும் ஊழியர்களை உள்ளூர் வேலைகளுடன் இணைத்து, ஒன்டாரியோவை வணிகத்திற்கும், வேலைகளுக்கும் திறந்து வைத்திருக்கிறது. அரசாங்கம்:

- Ontario Job Creation Investment Incentive இன் கீழ் ஆறு ஆண்டு காலத்தில் துரித மூலதன முதலீடை தள்ளுபடி செய்தல் மூலம் $3.8 பில்லியன் மாநில வணிக வருமான வரி நிவாரணம் அளிப்பது.
- 2020 க்குள் அரசாங்க தடைகளை 25 சத விகிதம் குறைப்பது. முழுதும் அமலாக்கப்பட்டபின் இந்த மாற்றங்கள் ஒன்டாரியோ வணிகங்களுக்கு $400 மில்லியனுக்கும் மேல் இணக்க செலவுகளில் சேமிப்புகளை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- Driving Prosperity அமல்படுத்துவது, ஒன்டாரியோவின் வாகண துறையில் போட்டித்திறன், கண்டுபிடிப்பு மற்றும் திறனை திடப்படுத்த ஒரு திட்டம்.

- January 1, 2019 முதல் ஒவ்வொரு $100 காப்புறுதிப்படக்கூடிய சம்பலப்பட்டியளில் Workplace Safety and Insurance Board (WSIB) சராசரி காப்புறுதிக் கட்டணத்தை $2.35 இல் இருந்து $1.65 க்கு குறைக்க ஆதரிப்பது, இது வேலை குடுப்பவர்களுக்கு 2019 இல் $1.45 பில்லியன் சேமிக்கும்.
- ஒன்டாரியோ மக்களை திறன்படும் தொழில்களில் நுழைய, மறு திறனடைய மற்றும் தொழிட்களில் வேலைவாய்ப்பு அனுகூலங்களை அறிந்து கொள்ள ஊக்குவிக்குமாறு திட்டங்களை நிறுவுவது.
- அதிகலவு திறன்பட்ட குடிபுகுவர்களை சிறிய சமூகங்களுக்கு அழைத்து வர ஒரு பைலட் முன்முயர்ச்சியை தொடக்குவது.
- புது ஊழியர்கள், புது வேலை ரீதி ஆரம்பிப்பவர்கள், வேலையற்றோர்கள் மற்றும் திறமைக்கு கீழே வேலை செய்பவர்கள் திட்டத்திற்கு தகுதியடைய அனுமதிக்க, பயிர்சி விண்ணப்பதாரர்கள் அன்மை பல்கலைகழக அல்லது கல்லூரி பட்டதாரர்களாக இருக்க வேண்டும் என்ற தேவையை நிகர்த்த ஒரு புதிய Northern Ontario Internship Program ஐ உருவாக்கல்.
- மத்திய அரசின் வேலையை கொள்ளும் கார்பன் வரியை எதிர்த்து போராடுவது, ஏனென்றால் அது வாகண, உற்பத்தி, சுரங்கத் தொழில் மற்றும் வன நடவடிக்கைகளின் செலவுகளை அதிகரித்து, ஆயிரக்கணக்கான வேலைகளை இழக்கும் ஆபத்து ஏற்படுத்தலாம்.

Ontario